**அமைப்புக்குழுத் தலைவர்**

முனைவர் சேது. சுடலைமுத்து
துணைவேந்தர்

**அமைப்புக்குழுத் துணைத் தலைவர்**

முனைவர் மு. பழனிசாமி
பதிவாளர்

**ஆலோசனைக் குழுத் தலைவர்**

முனைவர் நா.வெ. பாலாஜி
முதன்மையர்
கலை அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்

**ஆலோசனைக்குழுத் துணைத்தலைவர்**

பேராசிரியர் முனைவர் ப. தமிழரசி
முதன்மையர், மாணவர் நலன்

**கருத்தரங்கத் தலைவர்**

முனைவர் இரா. மதன்குமார்
பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்

**ஒருங்கிணைப்பாளர்கள்**

முனைவர் இரா. வீரபத்திரன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

முனைவர் பா. உமாராணி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

முனைவர் ர. சுரேஷ்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

**இணை ஒருங்கிணைப்பாளர்கள்**

முனைவர் ஆறுச்சாமி.செ
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

திரு ப. காளீஸ்வரமூர்த்தி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

முனைவர் சு. கோப்பெருந்தேவி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

*கற்பகம் உயர்கல்வி கலைக்கழகத் தமிழ்த்துறையும்,*
*சர்வதேசத் தமிழ் ஆய்விதழும் இணைந்து நடத்தும்*

**தேசிய கருத்தரங்கம்**

**தமிழ் இலக்கியங்களின் நோக்கும் போக்கும்**

**நாள் 27.03.2020 (வெள்ளிக்கிழமை)**

**பதிவுப்படிவம்**

பெயர் :..................................................................

கல்வித் தகுதி :..................................................................

பணியிட முகவரி :..................................................................

..................................................................................

..................................................................................

இல்ல முகவரி :..................................................................

..................................................................................

..................................................................................

அலைபேசி எண் :..................................................................

புலனம் (Whatsapp):..................................................................

மின்னஞ்சல் முகவரி:..................................................................

கட்டுரைத் தலைப்பு :..................................................................

..................................................................................

..................................................................................

பதிவுக்கட்டண விபரம்:

நாள் :

இடம் :

கையொப்பம்

(படியெடுத்தும் பயன்படுத்தலாம்)

**தேசிய கருத்தரங்கம்**

# தமிழ் இலக்கியங்களின் நோக்கும் போக்கும்

# NATIONAL LEVEL CONFERENCE on PERSPECTIVE of TAMIL LITERATURE


Enable | Enlighten | Enrich
KARPAGAM
ACADEMY OF HIGHER EDUCATION
(Deemed to be University)
(Established Under Section 3 of UGC Act, 1956)
கோயம்புத்தூர் – 641021, தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி: +91-422 2980011-14.
தொலைநகலி: 91- 422- 2980022.
மின்னஞ்சல்: info@kahedu.edu.in
வலைதளம்: www.kahedu.edu.in


**அமைப்பு**

தமிழ்த்துறை
கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்
மற்றும்
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

**நாள்**

27 மார்ச் 2020, வெள்ளிக்கிழமை

# தமிழ் இலக்கியங்களின் நோக்கும் போக்கும்
## தேசிய கருத்தரங்கம்

**அறிவிப்பும் அழைப்பும்**

பேரன்புடையீர்,

வணக்கம். கற்பகம் உயர்கல்வி கலைக்கழகமானது கோயம்புத்தூரில் 30 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்த பசுமையான வளாகத்தில் அமைந்துள்ளது. கோவை மாநகரின் சிறந்த கொடையாளரும் தொழிலதிபரும் கல்வியாளருமான டாக்டர் இராச. வசந்தகுமார் அவர்களால் 1989-ஆம் ஆண்டு கற்பகம் அறக்கட்டளையானது நிறுவப்பட்டது. கற்றலை ஊக்குவிக்கவும், சமுதாயத் தொண்டினைச் சிறக்கச் செய்யவும், தகுதியான மாணவ சமுதாயத்தை உருவாக்குகின்ற உயர்ந்தநோக்கத்தில், 1995-ஆம் ஆண்டு கற்பகம் அறக்கட்டளையின் கீழ், கற்பகம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது தொடங்கப்பட்டது. சிறந்த கல்விச்சேவையால் தன்னாட்சி அதிகாரமும் பெற்றுச் சிறந்திருந்த எமது கல்லூரியானது, மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்குகின்ற பல்கலைக்கழக மானியக்குழுவின் பிரிவு-3, 1956-விதிமுறைகளின்படி, 2008-ஆம் ஆண்டு முதலாக, கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம் என்ற பெயரில் நிகர்நிலைப்பல்கலைக்கழகத் தகுதியைப் பெற்றது. அத்துடன், 2005-ஆம் ஆண்டு தேசிய தரமதிப்பீட்டுக்குழுவின் சான்றினையும் பெற்று, இந்தியப் பல்கலைக்கழக வரிசையில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது.

இந்நிகர்நிலைப் பல்கலைக்கழகமானது கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம், பொறியியல் புலம், மருந்தியல் புலம், கட்டடவியல் புலம் என நான்கு புலங்களைக் கொண்டு, 25க்கும் மேற்பட்ட துறைகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. பட்டப்படிப்பு முதலாக, ஆய்வுப்படிப்பு வரையிலான 84 பாடப்பிரிவுகள் உள்ளன. 350-க்கும் மேற்பட்ட திறம்மிக்க ஆசிரியர்கள், 6000-க்கும் மேற்பட்ட மாணவர்களைப் பயிற்றுவிக்கின்றனர். ஆசிரியர்களின் ஆய்வுப்பங்களிப்பினால், டிபிடி/டிஎஸ்ட்/ஐசிஎம்ஆர் போன்ற பல்வேறு நிதிநல்கை அமைப்புகளின் ஆய்வுத்திட்டப்பணிகள் அதிகளவில் இங்கு மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. ஆசிரியப்பெருமக்களால் 2200-க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள், முன்னணி ஆய்விதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. 60-க்கும் மேற்பட்ட காப்புரிமைகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அத்துடன், எமது கல்வி நிறுவனமானது அயலகப் பல்கலைக்கழகங்கள், தொழில்நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி அமைப்புகளுடன் கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப ஒப்பந்தங்களை மேற்கொண்டு, மாணவர்களின் அறிவு மற்றும் ஆற்றல்சார் திறனை மேம்படுத்திவருகிறது. அதன்வாயிலாக, இங்கு கல்வி பயில்கின்ற மாணவர்கள், சமகால சவால்களை திறம்பட எதிர்கொண்டு, வளமான எதிர்காலத்தைக் கட்டமைக்கின்ற சிறந்த தலைவர்களாக உருவாகின்றனர்.

சிறப்புமிக்க எமது கல்வி நிறுவனத்தின் தமிழ்த்துறையானது பன்னிரு திருமுறை ஆய்வுமையத்தின் வாயிலாகவும், செவ்விலக்கியப் பயிலரங்குகள் வாயிலாகவும், செம்மொழிக் கருத்தரங்குகள் மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்குகள் வாயிலாகவும் ஆய்வுலகுக்கு ஆற்றிவருகின்ற பணிகள் குறிப்பிடத்தக்கவை. அதனைத் தொடர்ந்து **“தமிழ் இலக்கியங்களின் நோக்கும் போக்கும்” என்னும் தலைப்பில் அமைந்த தேசிய கருத்தரங்கத்தினைத் தமிழ்த்துறையானது யு.ஜி.சி யின் கேர் – பட்டியலில் இடம்பெற்றுள்ள சர்வதேச தமிழ் ஆய்விதழோடு இணைந்து 2020 மார்ச் 27–ஆம் நாளன்று** நிகழ்த்த உள்ளது. மொழியிலுள்ள இலக்கியங்களின் வரலாற்றுக்கும், அம்மொழி பேசும் சமூகத்தின் வரலாற்றுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தஅளவில் சங்ககாலம் தொடங்கி தற்காலம் வரையிலான அதன் வளர்ச்சிப் படிநிலைகள் மனித வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களையும் உட்கொண்டுள்ளது. இலக்கியங்களை அழகியலுக்குரியதாக மட்டுமே பார்த்துக்கொண்டிருந்த பார்வை இன்று விலகி அதன் சமூக சாராம்சத்தையும், மக்களின் வாழ்வியக்கத்திற்கும், இலக்கியத்திற்கும் இடையிலான தொடர்பைப் பற்றிப் பேசும் திறனாய்வுகள் இன்று வளர்ந்துவருகின்றன. இவ்வடிப்படையில். தமிழ் இலக்கியங்களின் நோக்கும் போக்கும் ஒவ்வொரு காலகட்டங்களிலும் எவ்வாறு தகவமைக்கப்பட்டுள்ளது, அவ்வக்கால சமூக மாற்றங்களில் அதன் தாக்கம் என்னவாக இருந்துவந்துள்ளது என்பதையெல்லாம் ஆய்ந்தறிவதே இன்றைய தேவையாகவுள்ளது. அதன் அடிப்படையில் தமிழ் இலக்கியங்களை அணுகமுனைந்தோமானால் தமிழ்ச் சமூக வரலாற்றில் தமிழ் இலக்கியங்களின் நோக்கும் போக்கும் குறிப்பிடத்தகுந்த விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதை அறியமுடிகின்றது. இதனைக் கருத்தில்கொண்டே இக்கருத்தரங்கத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இக்கருத்தரங்கில் பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகளை வழங்கிச் சிறப்பிக்க அறிஞர்களையும் ஆய்வாளர்களையும் தமிழ்த்துறையின் சார்பாக அன்போடு அழைக்கின்றோம்.

இவண்

கருத்தரங்க அமைப்புக் குழுவினர்.

### ஆய்வுக் கட்டுரைக்கான களங்கள்

* சங்க இலக்கியங்கள் * சங்கம் மருவியகால இலக்கியங்கள்
* காப்பியங்கள் * பக்தி இலக்கியங்கள்
* சிற்றிலக்கியங்கள் * தற்கால இலக்கியங்கள்
* நாட்டுப்புற இலக்கியங்கள்

மற்றும் இதுபோன்ற பொருண்மையிலான பல்வேறு களங்களிலும் ஆய்வுக்கட்டுரைகள் அமையலாம். அமைப்பியல், பின்னை அமைப்பியல், நவீனத்துவம், பின் நவீனத்துவம், தலித்தியம், பெண்ணியம், சூழலியம், பின்காலனியம் போன்ற இன்னோரன்ன ஆய்வு அணுகுமுறைகளைக் கொண்டு ஆய்வுக்கட்டுரைகள் அமையலாம்.

### கட்டுரையாளர்கள் கவனத்திற்கு

* ஆய்வுக் கட்டுரைகள் தரமானதாக இருக்கவேண்டும். ஆய்வுப் பொருண்மை குறித்து ஆழமான விவாதங்கள் இடம்பெற்றிருக்க வேண்டும். தன்னளவில் முழுமைபெற்றிருக்க வேண்டும். * ஆய்வுநெறிமுறைகளை முறையாகப் பின்பற்றி எழுதப்பட்டிருக்க வேண்டும்.

* அனைத்துத்துறை சார்ந்த கல்லூரிப் பேராசியர்கள், தமிழ் அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள், படைப்பாளர்கள் ஆகிய அனைவரிடமிருந்தும் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

* ஆய்வுக்கட்டுரைகள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அமையலாம். ஆய்வுக் கட்டுரைகள் A4 தாளில் 1.5 இடைவெளியுடன் ஏரியல் யுனிக்கோடு எம்எஸ் (Arialunicode-Ms) எழுத்துருவில் மட்டுமே ஏற்கப்படும். தட்டச்சுப் பிரதி, பதிவுப்படிவம், கட்டணவிவரம் போன்றவற்றை புலனம் (Whatsapp) மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைத்தால் போதுமானது.

* ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வுக் கோவையாகத் தொகுக்கப் பெற்று I S B N உடன் அச்சிடப்பட்டு கருத்தரங்க நாளன்று கட்டுரையாளர்களுக்கு வழங்கப்படும். கருத்தரங்க நாளன்று வர இயலாதவர்கள் ஆய்வுக்கோவை மற்றும் சான்றிதழை அஞ்சல்வழியில் பெறுவதற்கு ரூபாய் 150 கூடுதலாக அனுப்பவேண்டும்.

* தேர்வு செய்யப்படும் சிறந்த கட்டுரைகள் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ் (UGC Care Listed Journal) மின்-ஆய்விதழில் வெளியிடப்படும் (சர்வதேசத் தமிழ் ஆய்விதழில் இடம்பெறத் தேர்வாகின்ற கட்டுரைக்காக, பேராளர்கள் ரூபாய் 500/- கூடுதலாகச் செலுத்த வேண்டும். ஆய்வுக்கட்டுரை, பதிவுப்படிவம், பதிவுக் கட்டணம் ஆகிய அனைத்தும் வந்து சேரவேண்டிய இறுதிநாள் – 10.03.2020.

**கட்டுரை அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி – kahetamil2020@gmail.com**

### கட்டண விவரம்

பேராசிரியர்கள் / ஆய்வாளர்கள் - ரூ 500/-
வெளிநாடுவாழ் ஆய்வாளர்கள் / பேராளர்கள் - ரூ 1000/- (இந்திய ரூபாய் மதிப்புப்படி)

**பேராளர் கட்டணத்தை (NEFTவழியாக) கீழ்க்காணும் வங்கிக்கணக்கில் செலுத்தலாம்.**

| | |
|---|---|
| BANK NAME | : INDIAN OVERSEAS BANK |
| BRANCH | : SEERAPALAYAM KARPAGAM COLLEGE |
| A/C No | : 17000 2000 000 959 |
| IFSC | : IOBA 000 1700 |


**தொடர்புக்கு: அலைபேசி மற்றும் புலனம்**

* முனைவர் இரா. வீரபத்திரன் - 7667226628
* முனைவர் பா. உமாராணி - 9965148965
* முனைவர் சு. கோப்பெருந்தேவி - 9788847033